1979 மார்ச் 7] [திரு. கி. மனோகரன்]

நடந்ததை சரியோ தவறோ, நாளை இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைவர்களை கலந்து பேச இருக்கிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். சிம்கோ மீட்டர்ஸ் நிறுவனத்திற்கு ஏற்படுகின்ற சேதம், அவர்களுடைய சொத்துக்கு சேதம் ஏற்பட்டால் அது இந்த தமிழகத்திற்கு ஏற்படுகிற சேதம் என்பதை அனைவரும் மனதிற்கொள்ள வேண்டுமென்று நான் கூறும் போது இங்கே இருக்கின்ற அனைவரும், பொறுப்புள்ள தலைவர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஆக, தொழிலாளர்களிடையே ஏற்படுகின்ற கைகலப்பைத் தடுக்கவும், அந்த நிறுவனத்திற்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கவும் அங்கே காவல்துறையினர் நிறுத்தப்பட்டிருக்கிறார்களே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்து, நாளை இதுபற்றி ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு வங்கி விவசாயிகளுக்கு கடன் வழங்க இயலாத நிலையில் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்து திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. துரை முருகன் ஆகியோர் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். முதலில் திரு. பெ. சு. திருவேங்கடம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, ''வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு மைய வங்கி விவசாயிகளுக்கு கடன் வழங்க இயலாத நிலைமையில் உள்ளதன் காரணமாக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து'' மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

[முற்பகல் 11-10]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, 1978-79-ல் வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி குறுகிய கால விவசாய கடன்கள் வழங்க திட்டமிட்ட தொகை ரூ. 10 கோடி ஆகும். 1—4—1978 முதல் 31-1-1979 வரை திட்டமிட்ட விகிதாச்சார தொகையான ரூ. 6.85 கோடிக்கு பதில் வழங்கிய குறுகிய காலக் கடன்கள் ரூ. 5.93 கோடி ஆகும். கடந்த ஆண்டு இதே காலத்தில் வழங்கிய கடன்கள் ரூ.5.32 கோடி ஆகும். 1—2—1979 முதல் 21—2—1979 வரை வழங்கிய குறுகிய கால கடன்கள் ரூ. 12·69 இலட்சம். இருப்பினும் வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி கீழ்க்கண்ட காரணங்களால் மேலும் புதிய கடன் கள் வழங்க இயலாத நிலையில் உள்ளது.

(1) தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியிடமிருந்து பெற்ற கடன் ரூ. 624.47 இலட்சத்திற்கு எதிராக வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி வழங்கிய கடன்கள் ரூ. 1,224.69 இலட்சம். இதில் தவணை தவறிய நிலுவைகள் ரூ. 718.52 இலட்சமும், தவணை தவறாத கடன்கள் ரூ. 506.17 இலட்சமும் ஆகும். தவணை தவறாத கடன்களின் பற்றாக்குறை (Non-overdue cover deficit) ரூ. 118.30 இலட்சம் (624.47—506.17) இருக் கிறது. ஆகையால் மாநில கூட்டுறவு வங்கி இடமிருந்து மேலும் நிதியுதவி பெற்று கடன் பாக்கியில்லாத உறுப்பினர்களுக்கு புதிய கடன்கள் வழங்க இயலாத நிலையில் வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி உள்ளது.

(2) தவணை தவறிய கடன்களை வசூலிப்பதை விவசாயிகள் சங்கம் எதிர்ப்பதால், நிலுவையிலுள்ள கடன்களை வசூல் செய்ய இயலாத நிலையில் மத்திய வங்கி உள்ளது. தவணை தவறாத கடன்களில் பற்றாக்குறையான (Non-overdue cover deficit) ரூ. 118.30 இலட்சம் அளவுக்காவது விவசாயிகள் கடன் நிலுவைகளை செலுத்தினால் மட்டுமே வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி மேலும் புதிய கடன்கள் வழங்க வாய்ப்பு ஏற்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, மாண்பு மிகு அமைச்சரவர்கள் மத்திய வங்கி கடன் வழங்க முடியாத நிலையிலே இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டார்கள். இன்றைய தினம் சிறிய விவசாயிகள் மற்றும் நடுத்தர குடும் பங்கள் எல்லாம் மின் இணைப்பைப் பெற்றுத்தான் விவசாயம் செய்ய வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். மேலும் அவர் களுக்கு தனிப்பட்டவர்களிடமிருந்தும் கடன் கிடைப்பதில்லை, நேஷனலைஸ் செய்யப்பட்ட வங்கிகளிலே இருந்தும் கடன் கிடைப்பதில்லை. தவணை தவறியவர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்காத நிலை இருக்கிறது என்று கூறி கூட்டுறவு வங்கியும் தவணை தவறாதவர்களுக்குக் கூட கடன் வழங்க முடியாது என்று சொல்லுகின்ற நிலைமை இருந்து வருகிறது. இப்போது

1979 மார்ச் 7] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

அங்கே விவசாயம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது ஆகவே அமைச்சரவர்கள் அருள் கூர்ந்து தவணை தவறாத விவசாயிகளுக்காவது கூட்டுறவு வங்கியின் மூலமாக கடன் கொடுத்து அவர்கள் சாகுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, தவணை தவறாத கடன்களின் பற்றாக்குறை 118 இலட்சம் ரூபாயாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் போன்றவர்கள் விவசாயிகளுக்கு உற்சாகமளித்து அவைகளை எல்லாம் மத்திய வங்கிக்குக் கட்டச் சொன்னால் நல்லது. அப்படிக் கட்டிவிட்டால் வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி, மாநில கூட்டுறவு வங்கியிடமிருந்து மேலும் நிதியுதவி பெற்று அதன்மூலம் விவசாயிகளுக்கு உறுதுணை புரிய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, விவசாயிகள் பணம் கட்டவில்லை, ஆகவே அவர்களுக்குத் திரும்பக் கடன் கொடுக்க முடியவில்லை என்பதுதான் அமைச்சர் அவர்களின் பதிலிலே தொக்கி நிற்கின்ற உண்மை. அப்படியானால் கடனே வாங்காதவர்களுக்கு கடன் கொடுக்காமல் ஒரு சர்க்கார் இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். சில நேரங்களில் நட்டத்தைப் பார்க்காமல் செய்ய வேண்டும். சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் என்று ஒன்றிருக்கிறது. ஆகவே ஓவர்ட்யூ பார்க்காமல் கொடுத்துத்தான் ஆகவேண்டும். ஒரு ஊரிலே 5 பேர் இருக்கிறார்கள் என்றால் அதிலே மூன்று பேர்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது, அவர்கள் திரும்பக் கொடுக்கவில்லை. அதற்காக கடனே வாங்காத இரண்டு பேர்களுக்கும் கூட கடன் கொடுப்பது இல்லை என்பது எப்படிப் பொருந்தும். இப்படிக் கொடுக்கப்படாத காரணத்தால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்படுகிறது. அப்படி விவசாயம் பாதிக்கப்படுவதால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. அதனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் விலைவாசி ஏறிவிடுகின்றது, பிறகு அதன் காரணத்தால் ஒரு போராட்டமே ஏற்பட்டு விடுகின்றது. இப்படி ஒரு சர்க்கிள் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே விவசாயிகளிடம் கடன் பாக்கியை வசூலித்துத் தருகிறோம் என்று ஒரு அஸ்ஸூரன்ஸை மாநில வங்கிக்குக் கொடுத்து அதன்படி விவசாயிகளுக்கு பணம் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்தச் சர்க்கார் எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான ஆலோசனையைப் பரிவோடு எடுத்துக்கொண்டு விரைவில் ஆவன செய்ய உறுதி அளிக்கிறேன்.